# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
# ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் :164 /2017
தேதி :24.12.2017

## <u>கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்</u>

ஏசுபிரானின் அவதார நன்னாளை கிறிஸ்துமஸ் பண்டிகையாக உலகெங்கும் கிறிஸ்தவ மக்கள் கோலாகலமாகக் கொண்டாடிவருகிறார்கள். ஏசுபிரானின் வாழ்க்கை என்பது, அவர் தொழுவத்தில் தோன்றியது முதல், சிலுவையில் மறைந்தது வரையான கால வரலாறு மட்டுமே அல்ல.

சத்தியம் என்பது மனிதவடிவில் பிறந்து, தர்மம் என்னும் வேதமாய் நிலைத்து, அன்பின் ஒளியைப் புவியெங்கும் பரவச்செய்து, பூமியின் பாவ பாரத்தைச் சுமந்து ரட்சிக்கவந்த தேவ தத்துவம்தான், ஏசுபிரானின் வாழ்க்கை! அந்த தத்துவ போதனைகள் மானுடம் வளர்க்கும் அறநெறிகள்; சமத்துவம் வளர்க்கும் படிப்பினைகள்.

அத்தகைய அறநெறிகளையும், படிப்பினைகளையும் பின்பற்றி, அன்பும், சகிப்புத்தன்மையும், மகிழ்வும் மிக்க சமுதாயம் படைப்பதே நம் அனைவரின் நல்லெண்ணமாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி இவ்வினிய நன்னாளில், அனைத்து கிறிஸ்தவ சொந்தங்களுக்கும் என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் அன்புகலந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் – பொதுச்செயலாளர்


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com